பக்கங்கள்:-20

காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | பங்குனி 15 | சனிக்கிழமை | 29.03.2025 | அதிர்வு 236 |
|---|---|---|---|---|---|

# மோடியின் வருகையால் நெருக்கடியில் அநுர அரசு

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு



"இந்திய எதிர்ப்புக் கொள்கையிலிருந்த மக்கள் விடுதலை முன் னணிக்கு பிரதமர் நரேந் திர மோடியின் 06



## மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள்

# இராணுவத்தினராக இருந்தாலும் கட்டாயம் தண்டிக்கப்பட வேண்டும்

## முன்னாள் தளபதி பொன்சேகா திட்டவட்டம்

"மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருந்தால் இராணுவத் தினராக இருந்தாலும் தண்டிக்கப்பட்டே ஆகவேண்டும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை."

- இவ்வாறு வன்னியில் இறுதிப் போரை வழிநடத்திய இரா ணுவத் தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரி வித்தார். 06



# சிங்களத் தேசியத்துக்குள் கரைந்துபோக தமிழர் தயாரில்லை என்பதை நிரூபியுங்கள்

## தமிழரசின் பதில் தலைவர் சி.வி.கே. வேண்டுகோள்

(எஸ்.நிதர்ஷன்)

"கடந்த நாடாளுமன்றத் தேர்தல் போன்று தவறிழைக்காது தமிழர்கள் எப்போதும் தனித்துவமானவர்கள், அவர் கள் சிங்களத் தேசியத்துக்குள் கரைந்து போகத் தயாரில்லை என்பதை நடை பெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர் தலில் எடுத்தியம்ப வேண்டும் எனக் கேட் டுக்கொள்கின்றோம்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவ ஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் 06






இலங்கைப் போக்குவரத்து ஆணைக்குழு வின் தலைவர் கலாநிதி பந்துர திலீப விதாரண தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் கீழ் உள்ள அமைச்சுக்களுக்கான நிறுவனங்களின் தலை வர் பதவியிலிருந்து ராஜினாமா செய்த மூன்றா வது நபராக கலாநிதி பந்துர திலீப விதாரண உள்ளார்.

முன்னதாக, இலங்கை போக்குவரத்து சபை யின் தலைவர் ரமால் சிறிவர்தன மற்றும் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் தலை வர் ருவான் விஜயமுனி ஆகியோர் தங்கள் பதவி களில் இருந்து ராஜினாமா செய்திருந்தனர்.

இலங்கைப் போக்குவரத்து ஆணைக்குழு வின் தலைவர் கலாநிதி பந்துர திலீப விதாரண தனது ராஜினாமாக் கடிதத்தை போக்குவரத்து அமைச்சுக்கு அனுப்பியுள்ளார் எனத் தெரி விக்கப்படுகிறது. தேசிய மக்கள் சக்தியின் போக்கு வரத்துக் குழுவின் தலைவராகப் பணியாற்றிய கலாநிதி பந்துர திலீப விதாரண, 06



# தேர்தல் சட்ட மீறல் தொடர்பில் இரு நாள்களில் 3 முறைப்பாடுகள்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டங்களை மீறும் சம்பவங்கள் தொடர்பாக 26, 27 ஆம் திகதிகளில் இரு நாள்களிலும் நாடு முழுவதும் உள்ள பொலிஸ் நிலையங்களில் பெறப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் பொலிஸ் ஊடகப்பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி ஒரு குற்றவியல் முறைப்பாடும், தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் 2 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாணந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹொரண பொலிஸ் பகுதியில் உந்துருளியில் வந்த ஒரு நபர் பெண் ஒருவரை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் விதிமுறைகளை மீறிய சம்பவம் தொடர்பில் மட்டக்களப்பு - வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவாகியுள்ளது.

மேற்படி பகுதியில் வீடு வீடாகச் சென்று அரிசி, ஆடை மற்றும் பணம் உள்ளிட்டவற்றை வழங்கும் செயற்பாடு தொடர்பில் முறைப்பாடு ஒன்று பதிவாகியுள்ளது.

மொனராகலை பொலிஸ் பிரிவில் அலகியாவத்தை, மரகலவத்தை, குமாரவத்தை மற்றும் கிரிமண்டல மாவத்தை ஆகிய இடங்களில் உள்ள மத வழிபாட்டு தலங்களுக்கு அருகில் விளம்பரப் பலகைகள் பொருத்தப்பட்டிருப்பது குறித்து மொனராகலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவாகியுள்ளது.

குறிப்பிட்ட முறைப்பாடுகள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# விலங்குகள் கணக்கெடுப்பு தொடர்பான இறுதி அறிக்கை விரைவில் வெளியாகும்



பயிர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் விலங்குகள் தொடர்பில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் அறிக்கை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சிடம் கையளிக்கப்படும் என விவசாய அமைச்சின் விவசாயத் தொழில்நுட்ப பணிப்பாளர் ஹேமந்த அமரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மாவட்ட செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் ஹேமந்த அமரசிங்க தெரிவித்தார்.

25 மாவட்டங்களிலிருந்தும் அறிக்கைகளைப் பெற்ற பிறகு தேசிய அளவிலான அறிக்கை தயாரிக்கப்படும் என்றும் எதிர்காலத்தில் இந்தத் தகவல்கள் ஆய்வு செய்யப்பட்டு துல்லியமான அறிக்கை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# உள்ளூராட்சி சபை
# தேர்தல் களம்




# வடக்கு, கிழக்கு வதை முகாம்கள் பற்றி பேசுவதற்கு அநுர அரசு தயாரில்லை!

## சாடுகின்றார் சத்தியலிங்கம் எம்.பி.

(கி.வசந்தன்)

“பட்டலந்த வதை முகாம் போல் பல வதை முகாம்கள் வடக்கு, கிழக்கில் கடந்த 30 வருடங்களாக இயங்கின. இது தொடர்பில் விசாரிக்க இந்த அரசு தயாரில்லை.”

– இவ்வாறு சாடியுள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம்.

வவுனியாவில் உள்ளூராட்சி வேட்பாளர் அறிமுக நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“உள்ளூராட்சி சபைகளில் சிறப்பாகச் செயற்பட்டால் அதன் பின் வரும் மாகாண சபைத் தேர்தல், 5 வருடங்களின் பின் வரும் நாடாளுமன்றத் தேர்தல் என்பவற்றில் சிறப்பான வெற்றியைப் பெற முடியும்.

முல்லைத்தீவில் பாரம்பரிய வைத்தியம் படித்தவர்கள் வேலையில்லாமல் இருக்கின்றார்கள். பிரதேச சபைகள் இலசவச மருத்துவ சேவையை வழங்க வேண்டும். அதற்கேற்ப சட்டங்களை வகுத்து சித்த மருத்துவ நிலையங்களை உருவாக்க முடியும். அதில் அவர்களை வைத்தியர்களாக நியமிக்க முடியும்.

கட்சியைப் பலப்படுத்துவதற்கு உள்ளூராட்சி சபைகள் அவசியம். அத்துடன் மக்களுக்குச் சேவை வழங்க அவை முக்கியமானவை. தேர்தல் நேரம் பலர் வருவார்கள். ஆனால், கடந்த 75 வருடங்களாகத் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காகத் தியாகங்களை செய்த தாய்க் கட்சி ஆகிய தமிழரசுக் கட்சி சீசனுக்கு வரும் பறவைகள் அல்ல. நாம் மக்களுடனேயே இருக்கின்றோம்.

வவுனியா வடக்கு பிரதேசத்துக்குத் தண்ணீர் வரவில்லை. ஆனால், மகாவலி எல் வலயம் ஊடாக பல குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் திட்டமிட்டஇனப்பரம்பலை மாற்றும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

இதேபோன்று, செட்டிகுளம் பிரதேசம் கீழ் மல்வத்து ஓயா திட்டத்தின் மூலம் ஆபத்தான நிலையில் உள்ளது. புதிதாக வாக்காளர்கள் இணைக்கப்பட்டுள்ளார்கள். திட்டங்களை நேர்மையாக மக்களுக்காகச் செயற்படுத்தினால் நல்லது. ஆனால், இவ்வாறான திட்டங்களின் பின்னால் குடியேற்றங்கள் இடம்பெறுகின்றன.

வடக்கு – கிழக்கில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறலை ஏற்றுக்கொள்ள இந்த அரசும் தயாரில்லை.

அண்மையில், 4 பேரை பிரித்தானியா தடை செய்தது. அதனை எமது கட்சியும் வரவேற்றுள்ளது.

தற்போதைய அரசு இந்தத் தடையை, ”ஒரு தலைப்பட்சமான இந்த முடிவை ஏற்றுக்கொள்ள மாட்டோம்” என்று தெரிவித்துள்ளது.

பட்டலந்த அறிக்கை பற்றிப் பேசும் அவர்கள், பல வதை முகாம்கள் வடக்கு, கிழக்கில் இயங்கின. தங்கள் உறவுகளை இராணுவத்தினரிடம் கையளித்தவர்கள் உள்ளனர். அதை விசாரிக்க தயாரில்லை. அதைப் பற்றி பேச அவர்கள் தயாரில்லை.

கடந்த கால அரசுகள் என்ன பதிலைத் தந்தார்களோ அதே பதிலைத்தான் இவர்களும் சொல்கின்றார்கள். அவர்களது செயற்பாடுகளை மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இந்த அரசுக்கு ஒரு கால அவகாசத்தை வழங்கியுள்ளோம். பொருளாதார நெருக்கடிக்குள் இந்த நாடு இருந்தது. அவர்கள் உடனடியாக மஜிக் செய்ய முடியாது. அவர்கள் பொருளாதார ரீதியாக நாட்டை மீட்டு எமது அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். அதற்கு நாம் கால அவகாசம் வழங்கியுள்ளோம். அதனை அவர்கள் பயன்படுத்தி விரைவாகச் செய்ய வேண்டும். அது நடக்காவிடின் இந்த அரசையும் நாம் எதிர்ப்போம். அதற்கான காலத்தை அவர்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.” – என்றார்.

# உள்ளூராட்சி சபை
# தேர்தல் களம்










# அமைதியான போராட்டங்கள் மீது தாக்குதல் நடத்துகின்றது ஜே.வி.பி.

## பரப்புரைக் கூட்டத்தில் சஜித் குற்றச்சாட்டு

நாட்டில் பரவலாகப் போராட்டங்களை முன்னெடுத்த ஜே.வி.பியினர் தற்போது ஆட்சிக்கு வந்தபின்னர் அமைதியான போராட்டங்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட வேட்பாளர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவிக்கையில்,

"இணைந்த சுகாதார விஞ்ஞான பீட மாணவர்கள் வேலையின்றி உள்ளனர். பல அரச பணியிடங்களில் இவர்களுக்கான வெற்றிடங்களும் காணப்படுகின்றன.

இருந்த போதிலும் இவர்களுக்கான நியமனங்கள் இன்னும் வழங்கப்படவில்லை. எனவே தகுதிக்கு ஏற்ப வேலை வழங்குமாறு வீதிக்கு வந்து போராட்டம் நடத்திய போது அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எதிர்ப்பு தெரிவிக்கும் ஜனநாயக உரிமையை இன்றைய இளைஞர்கள் இழந்துள்ளனர்.

தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் குழுவினர் எதிர்க்கட்சியிலிருந்த போது போதியளவுக்கு எதிர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்தாலும், ஆட்சிக்கு வந்தபின்னர் எதிர்ப்பு தெரிவிப்பதற்கான ஜனநாயக உரிமையைக் கூட பறித்துள்ளனர்." என்றார்.











# சுற்றுலாப் பயணிகளின் வருகையில் சாதனை

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டிற்கு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

மார்ச் மாதம் 27 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நாட்டிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 200,000 ஐ கடந்துள்ளது.

கடந்த வருடம் மார்ச் மாதத்துடன் ஒப்பிடும் போது இவ்வருடம் மார்ச் மாதத்தில் நாட்டிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வளர்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது 13 வீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் இதுவரை 690,000 இற்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

இது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 14 வீதம் வளர்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

மார்ச் மாதத்தின் முதல் வாரத்தில் 53,111 சுற்றுலாப் பயணிகளும், தொடர்ந்து இரண்டாம் வாரத்தில் 52,459 சுற்றுலாப் பயணிகளும், மூன்றாம் வாரத்தில் 51,459 சுற்றுலாப்பயணிகளும் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

மார்ச் மாதத்தில் 22 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை சுற்றுலாப் பயணிகளின் வருகை சற்று குறைவைப் பதிவு செய்துள்ளது.

அதன்படி இந்த வாரத்தில் 34,771 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# நாட்டின் பல பகுதிகளில் இடியுடன் கூடிய மழை



நாட்டின் பல பகுதிகளில் இன்று மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டளவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, தென் மற்றும் ஊவா மாகாணங்களிலும் நுவரெலியா மாவட்டத்திலும் சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களின் சில இடங்களில் 50 மில்லிமீற்றருக்கும் அதிகமான கனமழை பெய்யக்கூடும்.

மேல், சப்ரகமுவ, தென் மற்றும் ஊவா மாகாணங்களிலும் கண்டி மாவட்டத்திலும் இடியுடன் கூடிய மழையுடன் தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு திணைக்களம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

# பிரசன்ன ரணவீர தாக்கல் செய்த மனு மீதான விசாரணை ஏப்ரலில்



தன்னை கைது செய்வதைத் தடுக்குமாறு உத்தரவிடக் கோரி முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீர மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவை விசாரணை செய்வதற்கு அனுமதிப்பதா? இல்லையா? என்பது தொடர்பான உத்தரவு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி வழங்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பிரசன்ன ரணவீரவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுவை ஆராய்ந்து பார்த்த பின்னரே மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

களனி பிரதேசத்தில் அரசாங்க காணியொன்றுக்குச் சட்ட விரோதமாகக் காணி உறுதிப்பத்திரம் தயாரித்து விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் தன்னை கைது செய்வதைத் தடுக்குமாறு உத்தரவிடக்கோரியே பிரசன்ன ரணவீர இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாவல திறந்த பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் பதவி விலகியதற்கான காரணம் இன்னும் வெளியாகவில்லை.

ஆயினும், போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் கீழ் உள்ள நிறுவனங்களின் தலைவர்களே குறுகிய காலத்தில் வரிசையாக ராஜினாமாச் செய்கின்றமையால் பிழை தலைமைத்துவத்தில்தான் என்றே தோன்றுகின்றது.

\+ + +

ஈழ தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த கரி ஆனந்தசங்கரி கனடாவின் சட்டமா அதிபராகவும், நீதி அமைச்சராகவும் பதவியேற்றிருக்கின்றார் என்பது தெரிந்த சங்கதி. அதுவும் அடுத்த மாதத்தில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு விரைவில் தேர்தல் நடந்து முடியும் வரைதான் அந்தப் பதவி.

மிகக் குறுகிய காலப் பதவி என்றாலும் அப்பதவியை வகிக்கின்ற காரணத்தினால் இப்போது அவர் 'கிங்ஸ் கவுன்ஸல்' (King's Counsel) - KC என்ற தர நிலையை (இலங்கையில் 'ஜனாதிபதி சட்டத்தரணி' என்ற மாதிரி) அவர் எட்டியுள்ளார்.

பொதுத் தேர்தல் முடிவுகளுக்கு பின்னர் தற்போதைய நீதி அமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் பதவிகளை அவர் இழந்தாலும், தொடர்ந்தும் அவர் 'கிங்ஸ் கவுன்ஸல்' என்றே – மன்னரின் சட்டத்தரணி என்றே – அழைக்கப்படுவார் என்பது குறிப்பிடத்தக்க விடயம். ஈழத் தமிழ் வம்சாவளிப் பிரதிநிதி ஒருவர் கனடாவில் கிங்ஸ் கவுன்ஸல் தர நிலையை எட்டியிருக்கின்றமை என்பது ஈழத் தமிழர்கள் அனைவருக்கும் பெருமை தரும் விடயம்தான்.

\+ + +

மார்ச் 15 ஆம் திகதி நாடு முழுவதும் நடத்தப்பட்ட தேசிய விலங்குக் கணக்கெடுப்பின் முடிவுகள் நேற்று அறிவிக்கப்படவிருந்த போதிலும், அது மேலும் தாமதமாகும் என்று சம்பந்தப்பட்ட செயற்குழு தெரிவித்துள்ளது.

சமீபத்தில், தேசிய விலங்கு கணக்கெடுப்பின் தரவுகள் அடங்கிய அறிக்கை நேற்று வெளியிடப்படும் என்று விவசாய துணை அமைச்சர் நாமல் கருணாரத்ன முன்னர் தெரிவித்திருந்தார்.

இருப்பினும், குழு நேற்றுக் கூடி தரவுகள் தொடர்பில் மறுஆய்வு நடத்தத் தீர்மானித்ததாக குழுவின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார். அதனால் முடிவுகள் வெளியாவது தாமதமாகும் என்று கூறப்படுகின்றது.

## இராணுவத்தினராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துடன், இவ்வாறான குற்றச்சாட்டுகள் தொடர்பில் தான் இராணுவத் தளபதியாக இருந்த காலத்திலேயே ஜகத் ஜயசூரியவுக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பித்திருந்தார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் முன்னாள் படைத் தளபதிகள் மற்றும் கருணா உள்ளிட்ட நால்வருக்குப் பிரிட்டன் விதித்த தடை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜகத் ஜயசூரிய, வசந்த கரன்னகொட ஆகியோர் போர்க் களத்தின் முன்வரிசையில் நின்று போரிட்டவர்கள் அல்லர். பின்வரிசையில் நின்றவர்கள்.

போர்க் களத்தின் பின்வரிசையில் ஏதேனும் தவறுகள் நிகழ்ந்திருந்தால் அவை விசாரிக்கப்பட வேண்டும்.

நான் இராணுவத் தளபதியாக இருந்த காலத்திலேயே ஜகத் ஜயசூரியவுக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பித்திருந்தேன்.

நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் இவர்கள் இருவரையும் பற்றி நாடாளுமன்றத்துக்குள்ளேயும் விமர்சித்திருந்தேன்.

இதேபோன்று, போர்க் களத்தின் முன்னரங்கில் நின்று போரிட்ட சவேந்திர சில்வா எதுவித தவறும் செய்யவில்லை என்று உறுதிபட என்னால் கூற முடியும்."

– என்றார்.

## மோடியின் வருகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை விஜயத்தின்போது அவரை எவ்வாறு எதிர்கொள்வது என்பதே தற்போது பெரும் நெருக்கடியாகவுள்ளது. இந்தியாவுடனான நட்புறவை மேலும் பலப்படுத்திக் கொள்வதற்குப் பதிலாக ஆணவப் பேச்சுக்களால் அதனைச் சீர்குலைக்கும் வகையிலேயே அரசு செயற்படுகின்றது."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இந்திய உயர்ஸ்தானிகரகத்தால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொருளாதார மாநாடொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"2044இல் 30 ரில்லியன் டொலர்கள் பொருளாதாரத்தை அடைவதே இந்தியாவின் இலக்காகும். உலகில் மிக வேகமான பொருளாதார வளர்ச்சியைக் கொண்ட நாடு இந்தியாவாகும். எமக்கு அவ்வாறான இந்தியாவுடன் பலமான பாலமொன்றை அமைத்துக்கொள்ள முடியாது போயுள்ளது. இந்தியாவுடன் மாத்திரமின்றி ஏனைய நாடுகளுடனும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்த வேண்டும்.

இந்திய எதிர்ப்புக் கொள்கையிலிருந்தவர்கள், இந்தியாவுக்கு எதிராக மனிதப் படுகொலைகளைச் செய்தவர்கள் தற்போது பாரிய நெருக்கடிக்குள்ளாகியிருக்கின்றனர்.

அடுத்த வாரம் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் செய்யும்போது அவருடன் சென்று எவ்வாறு சம்பூர் மின் உற்பத்தி நிலையத்தை திறந்து வைப்பது என்பதே அவர்களுக்குள்ள தற்போதைய பிரச்சினையாகும்.

சில சந்தர்ப்பங்களில் சம்பூருக்குச் செல்லாமலும் விடலாம். அரசின் நிகழ்ச்சி நிரல் என்ன என்பது எமக்கு தெரியாது. பொருளாதார ரீதியிலான இராஜதந்திர உறவுகளிலிருந்து விலகி, ஆணவம் கொண்ட பேச்சுக்களால் தற்போது இந்தியாவுடனுள்ள நட்புறவையும் பகைத்துக் கொள்ளும் செயற்பாடுகளையே அரசு முன்னெடுத்து வருகின்றது. மூடிய பொருளாதாரம் கொண்ட சிறிய நாடுகளால் அபிவிருத்தியடைய முடியாது.

இந்தியாவின் தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்கள் கூட டிரில்லியனுக்கும் அதிக பொருளாதாரத்தைக் கொண்டுள்ளன. எமக்கு மிகவும் அண்மையிலுள்ள தென்னிந்திய மாநிலங்களே இவ்வாறு பாரிய பொருளாதாரத்தைக் கொண்டுள்ளன. எனவே, இவற்றிடமிருந்து நாம் பொருளாதார ரீதியில் பயன்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்." – என்றார்.

## சிங்களத் தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும் தெரிவித்ததாவது,

"அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் மிகவும் முக்கியமான ஒரு தேர்தலாகப் பார்க்கப்பட வேண்டும். இங்கிருந்துதான் அடுத்த கட்ட நகர்வுகள் ஆரம்பிக்கப்படும்.

ஆகையினால் தமிழ்த் தேசியக் கட்சிகள் போட்டியிடுவது நியாயமானது. அதுவும் தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகளை ஆதரித்து அவர்களது வேட்பாளர்களுக்கு வாக்களிக்க முன்வரவேண்டியது மிகவும் முக்கியமானது.

குறிப்பாக நாடாளுமன்றத் தேர்தல் அனுபவத்தின் அடிப்படையில் நாங்கள் சுயமாகவும் தனித்துவமாகவும் இருக்கின்றோம் என்பதைத் தெளிவாகக் காட்ட வேண்டும்.

இதைவிடுத்து வெறுமனே இலங்கையர் என்ற தேசியத்துக்குள் கரைந்து வழிந்து போகாமல் இருக்க விரும்புகின்றோம் என்ற சொல்வதற்கு அல்லது காட்டுவதற்கு இந்தத் தேர்தல் மிக முக்கியமானதாக இருக்கின்றது." – என்றார்.



# பாங்கொக்கில் உள்ள இலங்கையர்களுக்கு பாதிப்பில்லை: தொலைபேசி எண் அறிமுகம்

மியன்மாரில் 7.7 மெக்னிடியூட் அளவில் ஏற்பட்ட நில அதிர்வைத் தொடர்ந்து பாங்கொக் மற்றும் தாய்லாந்தில் உள்ள ஏனைய பிரதேசங்களிலும் நில அதிர்வு உணரப்பட்டுள்ளது.

நில அதிர்வினால், தாய்லாந்து தலைநகரில் பலர் உயிரிழந்தனர் என சர்வதேச ஊடகங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

பாங்கொக்கில் உள்ள இலங்கைத் தூதரகம் தாய்லாந்து அதிகாரிகளுடன் இணைந்து நிலைமையைக் கண்காணித்து வருவதாகத் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்தநிலையில், தாய்லாந்தில் உள்ள இலங்கையர்கள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனத் தாய்லாந்துக்கான இலங்கை தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது.

அத்துடன், அங்குள்ள இலங்கையர்கள் அவசர சந்தர்ப்பங்களில் 0066 812 498 011 என்ற தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு மணித்தியாலங்களுக்கு மக்கள் அதிர்வுகள் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அஸ்வெசும காத்திருப்புப் பட்டியலில் உள்ள

# எட்டு இலட்சம் குடும்பங்களுக்கு 50% தள்ளுபடியில் உணவுப்பொதி

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டின் போது மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைத்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில், அஸ்வெசும பயனாளிகளாகப் பதிவுசெய்யப்பட்டு தற்போது காத்திருப்புப் பட்டியலில் உள்ள 08 லட்சம் குடும்பங்களுக்கு சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக தள்ளுபடி விலையில் உணவுப் பொதிகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி, 5000 ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அடங்கிய பொதி ஒன்றை 50 வீத தள்ளுபடியில் அதாவது, 2,500 ரூபாவுக்கு பெற்றுக் கொள்ள முடியும்.

லங்கா சதொச மூலம் உள்ளடக்கப்படாத பகுதிகளில் தகுதியான பயனாளிகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலம் இந்தத் தள்ளுபடி பொதி வழங்கப்படும்.

அஸ்வெசும பயனாளிகளாகப் பதிவுசெய்யப்பட்டு தற்போது காத்திருப்புப் பட்டியலில் உள்ள 812,753 குடும்பங்கள் பயனாளி குழுவாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

நிதி அமைச்சு, உணவுக் கொள்கை மற்றும் பாது




காப்பு குழு மற்றும் கூட்டுறவு விற்பனை நிலைய வலையமைப்பு ஆகியவை இணைந்து “சத்துடின் சதொசின்” என்ற கருப்பொருளில் ஒரு சிறப்புத் திட்டமாக இது செயல்படுத்தப்படும்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சிங்களத்தின் தொடர் தோல்வி

தமிழினத்தின் மீது நாசகார பேரழிவோடு கொடூர யுத்தம் நடத்தி முடிக்கப்பட்டு பதினாறு ஆண்டுகள் கடந்து விட்டன. ஆயினும், அந்தக் கொடூரத்திற்கான நீதி இன்னும் நிலைநாட்டப்படவில்லை. யுத்தத்தின் பெயரால் அரங்கேறிய அராஜகம் இன்னும் முழுமையாக அம்பலமாகவில்லை. அந்த யுத்தக் குற்றங்களை - மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களை - மனித உரிமை மீறல்களை - மேற்கொண்ட தரப்புகள் இன்னும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. பொறுப்பு கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை.

அரச பயங்கரவாதமாகக் கட்டவிழ்ந்த இந்தக் கொடூரத்தை தொடர்ந்து மூடி மறைத்து சமாளிப்பதில் கொழும்புஅரசுபடுதீவிரமாகஇருக்கின்றது. ஆயினும், காலம் கடந்தும் இந்த கொடூரத்திற்கான பொறுப்பு கூறலில் இருந்து சம்பந்தப்பட்டோர் தப்ப முடியாது என்பது தொடர்ந்து நிதர்சனமாகி வருகின்றது.

சர்வதேச ரீதியில் இப்போது கட்டவிழும் சில விடயங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

யுத்தக் கொடூரங்களை - யுத்தக் குற்றங்களை - மனித உரிமை மீறல்களை - துஷ்பிரயோகங்களை - மேற்கொண்ட படையணிகளின் தளபதிகள் மீது பிரிட்டன் பயணத்தடை விதித்திருக்கின்றது. அந்தச் சூடு அடங்குவதற்கு இடையில் கனடாவில் இன்னொரு காத்திரமான நடவடிக்கை இப்போது வெளியாகி இருக்கிறது.

தமிழினப் படுகொலை நடவடிக்கை விடயத்தில் சர்வதேசம் எப்போதும் பாதிக்கப்பட்ட தரப்பான ஈழத் தமிழர்களுடன்தான் நிற்கும் என்பது மீண்டும் கனடாவிலும் நிரூபணமாகியுள்ளது.

தமிழினப் படுகொலை மோசமாகக் கட்டவிழ்ந்த மே மாதத்தை ஈழத் தமிழர்கள் செறிந்து வாழும் கனடாவின் ஒன்ராறியோ மாநிலம் அர்த்தமுள்ள வகையில் அனுஷ்டித்து வருகின்றது.

தமிழினப் படுகொலை அறிவூட்டல் வாரம் என்று அழைக்கப்படும் சட்டமூலம் 104 ஐ அந்த மாநிலம் நிறைவேற்றி சட்டமாக்கியுள்ளது.

இந்தச்சட்டப்படி ஒவ்வொரு ஆண்டும் மே 18 ஆம் திகதியை ஒட்டிய வாரம் ஒன்ராறியோவில் தமிழ் இனப் படுகொலை அறிவூட்டல் கிழமையாகக் குறிப்பிடப்படுகிறது.

மே 2009 இல் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் இறுதிக் கட்டங்களில்படுகொலைசெய்யப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் பொது மக்களை நினைவுகூரும் நேரமாக இது அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

2021ஆம் ஆண்டு ஒன்ராறியோ சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட இந்த104 சட்டத்தை ரத்து செய்யும் முயற்சியில் பல சிங்கள அமைப்புகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்குப்போட்டுசட்டத்தைத்தடுக்கும் முயற்சிகள் தமிழர் துன்பங்களை அழிக்கவும் அங்கீகாரத்தைத் தடுக்கவும் நோக்கமாகக் கொண்ட மறுப்பு பிரசாரம் என்று தமிழ் கனேடிய அமைப்புகளும் சட்ட வல்லுநர்களும் பரவலாகக் கண்டனங்களை வெளியிட்டு வந்தனர்.

தமிழினப் படுகொலை அறிவூட்டல் வாரம் என்று அழைக்கப்படும் சட்டமூலம் 104 ஐ எதிர்த்து இலங்கை குழுக்கள் தாக்கல் செய்த வழக்கை கனேடிய உச்ச நீதிமன்றம் நிராகரித்து தள்ளுபடி செய்துள்ளதாக ஒன்ராறியோ மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் தெரிவித்துள்ளார்.

இது கனடாவிலும் உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியென அவர் தெரிவித்துள்ளார்.

அது உண்மைதான்...!




# காலாவதியான பொருள்களை விற்பனை செய்த கடை உரிமையாளருக்கு எதிராக தண்டப்பணம்

(பா.சதீசன்)

புதுக்குடியிருப்பு மற்றும் வள்ளிபுனம் பகுதிகளில் காலாவதியான பொருள்களை விற்பனை செய்த உரிமையாளருக்கு சுமார் 35 ஆயிரம் ரூபா தண்டம் நீதிமன்றினால் விதிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட வள்ளிபுனம் பகுதியில் பழுதடைந்த அரிசியை கர்ப்பிணி தாய்மாருக்கு விற்பனை செய்வதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் கடந்த 22 ஆம் திகதி வள்ளிபுனம் பொது சுகாதார பரிசோதகர்கள் பிரபல விற்பனை நிலையங்களில் சோதனை நடவடிக்கை ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது திகதி காலாவதியான 700 கிலோ அரிசி, பிஸ்கட் பைக்கற்றுகள் கைப்பற்றப்பட்டிருந்தன.

காலாவதியான பொருள்கள் கைப்பற்றப்பட்ட விற்பனை நிலைய உரிமையாளர்களிற்கு எதிராக முல்லைத்தீவு மேலதிக நீதவான் நீதிமன்றில் பொது சுகாதார பரிசோதகர்கள் றொய்ஸ்ரன் மற்றும் சந்திரமோகன் ஆகியோரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில், அந்த வழக்கு நேற்று முல்லைத்தீவு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது உரிமையாளர்களை குற்றவாளியாக இனங்கண்ட நீதிமன்றம் 35,000 ரூபா தண்ட பணம் விதித்ததுடன் கடுமையான எச்சரிக்கையும் வழங்கப்பட்டது.











# ஜேசுநாதர் சிலையில் நீர்வடிந்த அதிசயம்

(பா. சதீசன்)

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மாதிரி கிராமத்தில் அமைந்துள்ள அந்தோனியார் ஆலயத்தில் நிறுவப்பட்டுள்ள ஜேசுநாதர் சிலையில் நீர்வடிந்த அதிசயம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மாதிரி கிராமத்தில் அமைந்துள்ள அந்தோனியார் ஆலயத்தில் நிறுவப்பட்டுள்ள ஜேசுநாதர் சிலையின் மார்பு பகுதியில் இருந்து நீர் வடிந்ததாகவும், உடல் நரம்புகள் புடைத்து இருப்பது போன்று நீலநிறத்தில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்த தகவல் பிரதேசத்தில் பரவியமையையடுத்து, அந்த ஆலயத்திற்கு சென்ற மக்கள் வழிபாட்டில் ஈடுபட்டதுடன், மக்கள் பலர் கூடி பார்வையிட்டிருந்தனர்.

மேற்படி ஜேசுநாதர் சிலையில் இருந்து வழிந்தோடிய நீர் படிப்படியாக குறைவடைந்ததாகவும், சிலையில் நிறம் மாற்றமும் ஏற்பட்டதாக அங்கு கூடியிருந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.









# இளங்குமரன் எம்.பியைச் சந்தித்து பேசிய இந்திய மீனவர் பிரதிநிதிகள்

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கை – இந்திய மீனவர் விவகாரம் தொடர்பில் இந்திய மீனவர் பிரதிநிதிகள் நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரனைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் இளங்குமரன் எம்.பி. ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையில்,

“இலங்கைக்கு வந்துள்ள இந்திய மீனவர் சங்கப் பிரதிநிதிகள் மீனவர் பிரச்சினை தொடர்பில் என்னைச் சந்தித்து கலந்துரையாடி இருந்தனர்.

இந்தச் சந்திப்பில் இழுவைமடித் தொழிலை தாங்கள் கைவிடுவதாக எம்மிடம் கூறியிருக்கின்றார்கள். இது அவர்கள் எமக்குக் காட்டிய நல்லெண்ண சமிக்ஞையாக நாங்கள் பார்க்கின்றோம்.

அதற்கான நடைமுறைச் செயற்பாடுகள் தொடர்பிலும் இங்கு ஆராய்ந்துள்ளனர். அவர்கள் இழுவைமடித் தொழிலைக் கைவிட்டால் அவர்களுக்கான மாற்றுத் தொழில் ஏற்பாடுகளை அந்த நாட்டு அரசு செய்ய வேண்டும்.

குறிப்பாக இந்த இழுவைமடித் தொழிலாளர்கள் அந்த நாட்டு அரசிடம் கடலட்டைப் பண்ணை வைப்பதற்கு அனுமதி கேட்டுள்ளனர்.

உண்மையில் அவர்களது இந்த மாற்று முயற்சி நியாயமானது. ஏனெனில் அவர்களது கோரிக்கை நிறைவேற்றும் வகையில் செய்து கொடுப்பது அந்த நாட்டு ஆட்சியாளர்கள் தான்.

அவர்கள் சொல்வது போன்று இழுவைமடித் தொழிலை அவர்களாகவே நிறுத்தத் தீர்மானித்துள்ளமை நல்ல விடயம்.” – என்றார்.









# கிராமிய வைத்தியசாலைகளிலும் விசேட வைத்தியர்களின் சேவை

கிராமிய வைத்தியசாலைகளிலும் விசேட வைத்தியர்களின் சேவையை விரிவுபடுத்துவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போது ஆதார வைத்தியசாலைகள் அல்லது அவற்றுக்கு அடுத்த தரத்திலான வைத்தியசாலைகளில் மாத்திரமே விசேட வைத்தியர்களின் சேவை காணப்படுவதாக பிரதியமைச்சர், டொக்டர் ஹங்சக விஜயமுனி தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக கிராமப்புற மக்களுக்கு விசேட வைத்தியர்களின் சேவையை இலவசமாகப் பெற்றுக் கொள்வதற்கு இயலாமல் போயுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

முன்னோடி வேலைத்திட்டமாக கண்டி மாவட்டத்தின் 06 வைத்தியசாலைகளில் அடுத்த மாதம் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என வைத்தியர் ஹங்சக விஜயமுனி தெரிவித்தார்.

கிராமிய வைத்தியசாலைகளில் வாரத்திற்கு ஒருநாள் விசேட வைத்தியர்களின் சேவையை பெற்றுக் கொடுக்க இதனூடாக எதிர்பார்ப்பதாக அவர் கூறினார்.

இதற்காக வைத்தியர்கள் தாமாகவே விருப்பத்துடன் முன்வந்துள்ளனர் என பிரதியமைச்சர் வைத்தியர் ஹங்சக விஜயமுனி குறிப்பிட்டார்.

கிராமிய வைத்தியசாலைகளில் இருந்து நகர வைத்தியசாலைகளுக்கு வருகை தரும் நோயாளர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை குறைப்பதே இதன் நோக்கமாகுமென அவர் தெரிவித்தார்.



# தெவிநுவர துப்பாக்கிச்சூடு; மேலும் 4 சந்தேகநபர்கள் கைது

மாத்தறை தெவிநுவர பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 2 இளைஞர்கள் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் மேலும் 4 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வென்னப்புவ பகுதியில் மறைந்திருந்த நிலையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

கொலைக்கு உதவிய குற்றச்சாட்டில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த கொலைச்சம்பவம் தொடர்பில் முன்னதாக 5 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கடந்த 21ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இருவர் மீது வானில் வந்த சிலரால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. இதில் 28, 29 வயதான 2 இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.



# அதிவேக நெடுஞ்சாலையில் தீப்பற்றி எரிந்த சொகுசு பஸ்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த சொகுசு பஸ் ஒன்று திடீரெனத் தீப்பிடித்து பகுதியளவு எரிந்து நாசமாகியுள்ளது.

தொடங்கொட பகுதியில் நேற்று இச்சம்பவம் நடந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்..

தீயணைப்பு வீரர்களின் உதவியுடன் பஸ்ஸின் தீ அணைக்கப்பட்டதந்த் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தனியார் சொகுசு பஸ் கொழும்பிலிருந்து மாத்தறை நோக்கி சென்று கொண்டிருந்ததாகவும், தீ விபத்து நடந்த நேரத்தில் சாரதி மற்றும் மற்றொரு நபர் மட்டுமே அதில் இருந்துள்ளமையுடன், இருவரும் காயமின்றித் தப்பியுள்ளனர்.

தீ விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை என்றும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் மேலும் கூறப்படுகிறது.



# காணாமல் போயுள்ள வாகனங்களை தேடும் நடவடிக்கை ஆரம்பமானது

மாகாண சபைகளுக்கு சொந்தமான காணாமல் போயுள்ள வாகனங்கள் தொடர்பில் தேடுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் பிரதியமைச்சர் ருவான் செனரத் தெரிவித்துள்ளார்.

மேற்படி வாகனங்கள் தொடர்பிலான விசாரணைகளுக்காக குழு நியமிக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகளுக்கு சொந்தமான நிறுவனங்களின் செயற்றிட்டங்களுக்காக வழங்கப்பட்ட வாகனங்கள் சில காணாமல் போயுள்ளதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளமையால் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதாக பிரதியமைச்சர் ருவான் செனரத் தெரிவித்தார்.

அரசுக்கு சொந்தமான வாகனங்களை முறைகேடாக பயன்படுத்திய தனிநபர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் பிரதியமைச்சர் ருவான் செனரத் தெரிவித்துள்ளார்.

# மீனவர்களின் நலன்கருதி முல்லையில் வெளிச்சவீடு அமைக்கப்பட வேண்டும்

## ரவிகரன் எம்.பி. கோரிக்கை

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவில் வெளிச்சவீடு இன்மையால் கடலுக்குச்செல்லும் மீனவர்கள் கரைதிரும்புவதில் பாரிய இடர்பாடுகளை நீண்டகாலமாக எதிர் நோக்கி வருகின்றனர்.



எனவே மீனவர்களின் நலன் கருதி முல்லைத்தீவு கடற்கரையில் வெளிச்சவீடொன்று அமைக்கப் படவேண்டுமென வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனினால் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பிரேரணை ஒன்று முன் மொழியப்பட்டது.

அந்தப் பிரேரணை ஒருங்கிணைப் புக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டதுடன், இவ்வாறு எடுக்கப்பட்ட தீர் மானத்தை கடற்றொழில் அமைச்சர் உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கியஸ் தர்களுக்கும் அனுப்பிவைப்பதென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது நாடாளுமன்ற உறுப் பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக் கையில் –

முன்பு முல்லைத்தீவு – மணற்குடி யிருப்புப் பகுதியில் வெளிச்ச வீடொன்று இருந்தது. அது தற்போது முற்று முழுதாக அழிவடைந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கொக்கிளாயிலி ருந்து பேப்பாரப்பிட்டிவரை சுமார் 74கிலோமீற்றர் வரையிலான கடற் கரையோரத்தில் அதிகளவான மீன் பிடித் துறைகளிலிருந்து, மீனவர்கள் கடற்றொழில் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேரந்த மீனவர்கள், முன்பு வெளிச்சவீட்டின் உதவியுடன் இடர்பாடுகளின்றி கட லுக்குச்சென்று தமது துறைகளில் கரை யேறுவார்கள்.

தற்போது வெளிச்சவீடு முற்றாக அழிவடைந்துள்ளதால், கடலுக்குச் செல்லும் மீனவர்கள் கரையேறு வதில் பாரிய சிக்கல்களை எதிர் நோக்கியுள்ளனர்.

கடந்த 21ஆம் திகதி நாடாளுமன் றில், கடற்றொழில் அமைச்சருடனும் பேசியுள்ளேன். அவரும் வெளிச்சவீட் டினை அமைப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித் திருந்தார்.

எனவே இந்த மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில், ஏற்கனவே முன்பிருந்த இடத்தில் வெளிச்சவீட்டை அமைப்பதென ஒரு தீர்மானத்தை எடுப்பதுடன், அந்தத் தீர்மானத்தை கடற்றொழில் அமைச் சர் உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கி யஸ்தர்களுக்கும் நடவடிக்கைக்காக அனுப்பிவைப்பதென்ற ஒரு தீர்மா னத்தையும் எடுப்போம் – என்றார்.

இந்நிலையில் வெளிச்சவீடு அமைப் பது தொடர்பில் தீர்மானம் எடுக்கப் பட்டதுடன், தீர்மானத்தை கடற்றொழில் அமைச்சர் உள்ளிட்ட உரிய தரப்பி னருக்கு அனுப்பிவைப்பதென்ற முடிவும் எடுக்கப்பட்டது.




# தொடுவாவ பகுதி விபத்தில் சைக்கிளோட்டி படுகாயம்!

(உடப்பு க.மகாதேவன்)

சிலாபம், கொழும்பு வீதி தொடு வாவ பகுதியில் நேற்று இடம் பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலத்த காயம் ஏற்பட்ட நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கார், சைக்கிளுடன் மோதுண்டு பின்னர் அருகிலுள்ள மின்சார தூணில் கார் மோதியுள்ளது. சைக்கிளில் பய ணித்தவர் படுகாயமடைந்து அருகி லுள்ள வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகி றார் எனப் பொலிஸார் மேலும் தெரி வித்தனர்.

# யாழில் தமிழரசு வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வு ஏப்ரல் 4 ஆம் திகதி

யாழ் மாவட்டத்தை சேர்ந்த – இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் 17 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் போட்டியிடும் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் எதிர்வரும் 04 ஆம் திகதியன்று பிற்ப்கல் 2மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் இடம்பெறவுள்ளது.

இன்றையதினம் இந்தக் கூட்டம் நடைபெறும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் கட்சியின் நீண்டகால நிர்வாக செயலாளருமான சூ.சே.குலநாயகத்தின் ஏகபுதல்வியான சட்டத்தரணி ஆன் குலநாயகம் அவர்களின் திடீர் மறைவு காரணமாக அந்தக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



# மதுரங்குளியில் கார் – லொறி நேருக்கு நேர் மோதி விபத்து

**(உடப்பு க.மகாதேவன்)**

புத்தளம் – சிலாபம் பிரதான வீதியில் மதுரங்குளி பிரதேசத்தில், ஒரெஞ்ச் பாவனை மின்சாதனப் பொருள் ஏற்றிய லொறியும், கார் ஒன்றும் நேற்று முன்தினம் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் காரில் பயணம் செய்தவர்களில் இருவர் படுகாயமடைந்தனர். இருவரும் புத்தளம் வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளை மதுரங்குளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.








## த.வெ.க. பொதுக்குழு:

# இலங்கைத் தமிழர் பிரச்சினை உள்ளிட்ட 17 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

தமிழக வெற்றிக் கழகத்தின் பொதுக் குழுவில் இலங்கை தமிழர் பிரச்சினை உள்ளிட்ட 17 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் முதல் பொதுக்குழு கூட்டம் சென்னை திருவான்மியூர் ராமசந்திரா கன்வென்ஷன் சென்டரில் நேற்று நடைபெற்றது.

த.வெ.க. தலைவர் விஜய் தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்தில், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் என மொத்தம் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

கட்சியை வழிநடத்துவது, கூட்டணி அமைப்பது தொடர்பாக கட்சியின் தலைவர் விஜய்க்கு முழு அதிகாரம் வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழக வெற்றிக் கழகம் கட்சியில் புதிதாக பொறுப்பேற்றுள்ள நிர்வாகிகளுக்கு வாழ்த்து தெரிவித்தும், தவெக கட்சியில் உயிரிழந்த நிர்வாகிகளுக்கு இரங்கல் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாநில அரசுகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மத்திய அரசு கொண்டு வந்த வக்ஃப் வாரிய சட்ட திருத்தத்திற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மகளிருக்கு எதிரான குற்றங்களை விரைந்து விசாரிக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இரு மொழி கொள்கைக்கு ஆதரவாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மீனவர் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், மீனவர் பிரச்சனைகளுக்கு தீர்வு காண வலியுறுத்தியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தொகுதி மறுவரையறையை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பரந்தூர் பகுதியில் விமான நிலையம் அமைக்க கூடாது என தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

சமூகநீதியை நிலைநாட்ட சாதி வாரி கணக்கெடுப்புக்கான ஆய்வு நடத்த வேண்டும் என தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

அரசாங்க ஊழியர்கள் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கை தமிழர் பிரச்சினைக்கு பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

டாஸ்மாக் முறைகேடு விவகாரத்தில் உரிய விசாரணை நடத்த வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கொள்கை தலைவர்கள் வழியில் பயணிக்க வேண்டும் என 17 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.



# பெயரில் மட்டும் வீராப்பா? செயலிலும் காட்டவேண்டும்

## முதல்வரை சாடினார் விஜய்



பெயரை மட்டும் வீராப்பாக வைத்தால் போதாது, செயலிலும் காட்ட வேண்டும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினையும், தி.மு.கவையும் விஜய் கடுமையாக விமர்சித்துள்ளார்.

த.வெ.கவின் முதல் பொதுக்குழு கூட்டம் சென்னை திருவான்மியூரில் உள்ள ராமச்சந்திரா கன்வென்ஷன் சென்டரில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு கட்சித் தலைவர் விஜய் தலைமை வகித்தார். உறுதிமொழியோடு தொடங்கிய கூட்டத்தில் மொத்தம் 17 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் நன்றியுரை ஆற்றிய விஜய் தி.மு.க. ஆட்சியை, தமிழக முதல் வரை, மத்தியில் ஆளும் பா.ஜ.கவை, பிரதமர் மோடி விமர்சித்துப் பேசினார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

“அரசியல் என்றால் என்ன? ஒவ்வொரு குடும்பமும் நல்லா வாழ வேண்டும் என்று நினைப்பது அரசியலா? இல்லை ஒரே ஒரு குடும்பம் மட்டும் தமிழ்நாட்டை சுரண்டி நல்லா வாழ்வது அரசியலா? எல்லோருக்கும் நல்லது நடப்பதுதானே அரசியல். அதுதான் நம்ம அரசியலும். கட்சிக்கு திராவிடம், ஆட்சிக்கு திராவிட மாடல்னு, தினம் தினம் மக்கள் பிரச்சினைகளை மடைமாற்றி, மக்கள் ஆட்சியை மன்னராட்சிப் போல நடத்தும் இவர்கள், நமக்கு எதிராக செய்யும் செயல்கள் ஒன்றா, இரண்டா?

மாநாடு தொடங்கி, நான் கலந்து கொண்ட புத்தக வெளியீட்டு விழா, பரந்தூர் நிகழ்ச்சி, த.வெ.க. இரண்டாம் ஆண்டு துவக்க விழா, அன்றைய தினம் நகருக்குள் எந்த திருமண மண்டபமும், அரங்கமும் நமக்கு கொடுத்துவிடக் கூடாது என்று, மாமல்லபுரம் சென்று அந்த நிகழ்ச்சியை நடத்தினோம். ஏன் இன்று நடைபெறும் பொதுக்குழுக் கூட்டம் வரை எங்கெல்லாம் எப்படியெல்லாம் தடைகள் வந்தன? அத்தனை தடைகளையும் தாண்டி தவெக தொண்டர்கள் சந்திப்பு நிகழ்ச்சிகள், மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்துகொண்டு தான் இருக்கும்.அது தொடர்ந்து நடக்கும்.

மாண்புமிகு மன்னராட்சி முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களே, பெயரை மட்டும் வீராப்பாக சொன்னால் பத்தாது, செயலிலும் ஆட்சியிலும் அதைக்காட்ட வேண்டும். மத்தியில் ஆளும் பா.ஜ.க. ஆட்சியை ஒரு பாசிச ஆட்சி என்று அடிக்கடி அறிக்கைகள் கொடுத்துவிட்டு, இங்கு நீங்கள் செய்யும் ஆட்சி மட்டும் என்னவாம்? அதற்கு கொஞ்சம்கூட குறைவில்லாத அதே பாசிச ஆட்சிதானே.



ஒரு கட்சித் தலைவனாக எனது கட்சித் தொண்டர்களையும், என் நாட்டு மக்களையும் சந்திப்பதற்கும், பேசுவதற்கும் தடை போடுவதற்கு நீங்கள் யார்? தடையை மீறி என் மக்களை பார்க்க வேண்டும் என்றால் சென்றே தீருவேன்.

சட்டத்தை மதிக்க வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காகத்தான் அமைதியாக இருக்கிறேன்.நேற்று வந்தவன் எல்லாம் முதல்வராக கனவு காண்கிறேன் என்று கூறுகிறீர்கள். அது நடக்கவே நடக்காது என்று கூறுகிறீர்கள். பிறகு ஏன், மற்ற எந்த கட்சிகளுக்கும் இல்லாத தடைகளை விதித்துக் கொண்டே இருக்கிறீர்கள். அணை போட்டு ஆற்றை வேண்டுமானால் தடுக்கலாம். காற்றைத் தடுக்க முடியாது. அதையும் மீறி தடுக்க நினைத்தால், சாதாரணமாக இருக்கும் காற்று சூறாவளியாக மாறும். ஏன் சக்தி மிக்க புயலாக கூட மாறும்.

த.வெ.க. தொண்டர்களுக்கு, மாநாட்டில் நான் ஒரு விஷயத்தை வலியுறுத்திக் கூறினேன். அதையேதான் நான் மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன். இந்த மண் பிளவுவாத சக்திகளுக்கு எதிரான மண். சகோதரத்துவ மண். சமய நல்லிணக்கத்தைப் பேணும் சமூகநீதிக்கான மண். இதை நாம் பாதுகாத்தே தீர வேண்டும்.

தமிழகத்தின் பிற பகுதிகளில் இருந்து வரக்கூடிய செய்திகளைக் கேட்கும்போது மன உளைச்சலையும், மன வேதனையையும் தருகிறது. சட்டம் ஒழுங்கு என்று ஒன்று இருப்பதாகவே தெரியவில்லை.

தமிழகத்தின் மன்னராட்சி முதல்வரே, உங்களுடைய ஆட்சியைப் பற்றிக் கேள்வி கேட்டால் மட்டும் ஏன் உங்களுக்கு இவ்வளவு கோபம் வருகிறது? நீங்கள் ஒழுங்காக ஆட்சி நடத்தியிருந்தால், பெண்கள் பாதுகாப்பு சரியாக இருந்திருக்கும். சட்டம் ஒழுங்கு சரியாக இருந்திருக்கும். பச்சிளம் குழந்தைகள், படிக்கும் குழந்தைகள், வீட்டில் இருக்கும் சின்ன பெண்கள், வேலைக்குச் செல்லும் பெண்கள் என்று இவர்களுக்கு நடக்கின்ற கொடுமைகளைச் சொல்ல முடியவில்லை. இதில் உங்களை அப்பா என்று அழைப்பதாக சொல்கிறீர்கள்.

பிரதமர் மோடி அவர்களே, என்னமோ உங்களது பெயர்களை எல்லாம் சொல்வதற்கு எங்களுக்கு எல்லாம் ஏதோ பயம் என்று சிலர் கூறுகின்றனர். மத்தியில் ஆள்பவர்கள் என்று சொல்கிறோம். மத்தியில் ஆட்சியில் இருப்பது யார் காங்கிரஸா? மாநிலத்தில் ஆள்பவர்கள் என்று பேசுகிறோம். இங்கு ஆள்பவர்கள் யார் அ.தி.மு.கவா? பிறகு என்ன பெயர் சொல்ல வேண்டும் என்று கூறுவது? எனக்கு ஒன்றும் புரியவில்லையே.““ – என்றார்.

# மியன்மாரில் பாரிய நிலஅதிர்வு; 140இற்கு மேற்பட்டோர் பலி







மியான்மரில் ஏற்பட்ட பாரிய நில அதிர்வில் சிக்கி 144 பேர்வரை உயிரிழந்துள்ளனர் என தகவல்கள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

மியான்மரை நேற்று இரண்டு பூகம்பங்கள் தாக்கியதில் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன. ஏற்கெனவே இராணுவ ஆட்சியின் கீழ் இருந்துவரும் மியான்மரில் பல பகுதிகளில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் நேரப்படி முற்பகல் 11.50 மணிக்கு ரிச்டர் அளவில் 7.7 மற்றும் 6.4 ஆக நில நடுக்கங்கள் பதிவாகின. இந்த பூகம்ப பாதிப்புகள் அண்டை நாடான தாய்லாந்திலும் அதிக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அங்கு பல இடங்களில் பாதுகாப்பு கருதி பொதுப் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

இந்த பூகம்பத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் பற்றிய தகவல்கள் உடனடியாக வெளியாகாத நிலையில், தற்போது உயிரிழந்தவர்கள் பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன. லைநகர் நைப்பியிதோவில் உள்ள பெரிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தவர்களில் 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, மியான்மர் இராணுவ ஆட்சிக் குழு சர்வதேச உதவிக்கு அழைப்பும் விடுத்துள்ளது.

பூகம்பம் காரணமாக மியான்மரில் உள்கட்டமைப்பு வசதிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் மேரி மான்ரிக் கூறுகையில்,

“சாலைகள், பாலங்கள், அரசு கட்டடங்கள் என பொது உள்கட்டமைப்பு வசதிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. தற்போது எங்களுக்கு பெரிய அணைகள் பற்றி கவலை எழுந்துள்ளது. அவற்றின் நிலைமைகள் குறித்து தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது” என்று தெரிவித்தார்.

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் பெரிய கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் 20 பேர் உயிரிழந்தனர். சுமார் 80 பேர் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர் என அஞ்சப்படுகிறது. இந்த நிலநடுக்கத்தால் சியாங் மாய் உள்ளிட்ட வடக்கு தாய்லாந்து சிறிது நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. அங்குள்ளவர்கள் இந்த நிலநடுக்கம் இதுவரை உணர்ந்திராத அளவில் பயங்கரமாக இருந்தது எனத் தெரிவித்தனர். இதனிடைய இந்தியா, பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய கூட்டமைப்பு உள்ளிட்ட சர்வதேச நாடுகள் உதவி முன்வந்துள்ளன.

தாய்லாந்து பிரதமர் பேடோங்டார்ன் ஷினாவத்ரா நாட்டில் அவசர நிலையை அறிவித்துள்ளார். தலைநகர் பாங்கொக் பேரிடர் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளதாக நகர நிர்வாகம் தெரிவித்துள்ளது. பேரிடர் மீட்பு பணிகளை ஒருங்கிணைக்கும் பணிகள் பாங்கொக் ஆளுநர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# மூன்றாவது சார்ள்ஸ் மன்னர் வைத்தியசாலையில் சேர்ப்பு



பிரித்தானியாவின் மூன்றாவது சார்ள்ஸ் மன்னர் உடல்நிலை மோசமடைந்தமையின் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு ஏற்பட்டுள்ள புற்றுநோயிற்காக சிகிச்சையளிக்கப்பட்டபோது ஏற்பட்ட பக்கவிளைவின் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், பர்க்கிங்ஹேம் நகரத்திற்கு அவர் செல்லவிருந்த சுற்றுப் பயணமும் இரத்து செய்யப்பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சார்ள்ஸ் மன்னருக்குப் புற்றுநோய் ஏற்பட்டுள்ளதாக வைத்தியர்கள் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் கண்டு பிடித்தனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.03.2025

## மேஷம்

இன்று உங்கள் செயல்களில் எச்சரிக்கையும்பொறுமையும்தேவை.இன்றுசிலவிதமான இழப்புகளை சந்திக்க நேரலாம். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகள் நிலுவையில் இருக்கும். பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை தரமாக முடித்துக் கொடுக்க திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படலாம். வன்மையாக நடந்து கொள்ளலாம். எனவே மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்த்தல் நல்லது.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்று அதிகம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும். தேவையற்ற செலவுகளின் கவலையும் இன்று காணப்படும்.

இன்று வயிறு உப்பச பாதிப்பு ஏற்படலாம்.

## ரிஷபம்

உங்கள் கடின உழைப்பு மூலம் இன்று வெற்றி கிடைக்கும். உங்கள் சுய முன்னேற்றத்தின் மூலம் நீங்கள் கடினமாக உழைத்து வெற்றியை அடையலாம். இன்று நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்துக் கொண்டு அதற்கு முயற்சி செய்வீர்கள்.

பணிநிமித்தமான பயணம் காணப்படும். இது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கும் சேமிப்பதற்கும் பணம் கிடைக்கும் அதிர்ஷ்டம் இன்று காணப்படுகின்றது.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.

## மிதுனம்

உங்கள் தகவல் பரிமாற்ற திறமை காரணமாக இன்று நீங்கள் வெற்றி பெறுவீர்கள். ஆன்மீக சொற்பொழிவுகளை கேட்பது பக்திப் பாடல்களை கேட்பது போன்ற விஷயங்களில் ஈடுபடுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் கடின உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும்.

உங்கள துணையுடன் அன்பும் அனுசரனையுமாக நடந்து கொள்வீர்கள். குடும்பப் பிரச்சினை பற்றி மனம் திறந்து பேசுவீர்கள். அதனால் திருப்தியாக உணர்வீர்கள்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு தேவையான பணம் இன்று காணப்படுகின்றது . இதனை நீங்கள் ஆன்மீக காரியங்களுக்கு பயன்படுத்தலாம்.

## கடகம்

இன்று ஆன்மீக செயல்களில் ஈடுபடுவீர்கள். பக்திப் பாடல்கள் கேட்டு மன ஆறுதல் பெறுவீர்கள். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் இருப்பீர்கள்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் உங்களின் மாறுபட்ட மன நிலையைக் காண்பிப்பீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

இன்று பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிப்பதை நீங்கள் கடினமாக உணர்வீர்கள்.

இன்று பதற்றம் காணப்படும். ஆரோக்கியமாய் இருக்க தியானம் மேற்கொள்வது சிறந்தது.

## சிம்மம்

இன்று விருப்பமான பலன்கள் கிடைப்பது அரிது. உங்கள் மனதை அமைதியாக வைத்துக்கொள்ள வேண்டும். நடந்து செல்லும் போதும் அல்லது பயணத்தின் போதும் காயம் ஏற்படாமல் இருக்க கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச தயங்குவீர்கள். அவரால் புறக்கணிக்கப் படுவதாக திடமாக நம்புவீர்கள்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று அடிப்படை தேவைகளை சமாளிப்பதும் நிதிநிலையை சமாளிப்பதும் கடினமாக உணர்வீர்கள்.

## கன்னி

இன்று மகிழ்ச்சியாக இருக்கும் சூழ்நிலை காணப்படும். உங்கள் எண்ணங்களிலும் செயல்களிலும் அது பிரதிபலிக்கும். தியானம் மேற்கொள்வதன் மூலம் மன ஆறுதல் கிடைக்கும்.

இன்று புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் பணிகளை திறமையாக செய்வதற்கான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்பாக நேர்மையாக பழகுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிவளர்ச்சி சிறப்பாக இருக்கும். நீங்கள் சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள். இது உங்கள் நிதி நிலையை மேம்படுத்தும்.

## துலாம்

இன்று உங்கள் முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். உங்கள் பாதையில் நீங்கள் சில தடைகளை சந்திக்க நேரும். மாறும் சூழ்நிலைகளுக்கேற்பஉங்களைமாற்றிக் கொண்டால் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள் சக பணியாளர்களுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினைகள் காணப்படும். இது பணியிடச் சூழலை பாதிக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அமைதியான அணுகுமுறை மூலம் நல்லுறவை வளர்க்க முடியும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் அதிகமாக காணப்படும்.

## விருச்சிகம்

இன்று உங்கள் செயல்களை நேர்மையாகவும் நாணயமாகவும் செய்ய வேண்டும். கொள்கைகளில் தளராமல் நடு நிலையோடு இருக்க வேண்டும். இல்லையெனில் உங்களுக்கெதிரான சூழ்நிலை ஏற்படலாம். இன்று அமைதியாக இருப்பது சிறந்தது.

உங்கள் பணிகளை திறமையுடன் கையாளும் உறுதி குறைந்து காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைகாது. உங்கள் செயல்திறனுக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையிடம் நீங்கள் இன்று வன்மையாக நடந்து கொள்ள நேரலாம். மகிழ்ச்சியாக இருக்க இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

இன்று பண வரவு காணப்படாது. நிதி வளங்கள் வற்றிக் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.03.2025




இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. ஆன்மீக நோக்கத்திற்கான பயணம் ஒன்றை மேற்கொள்ள நேரும். சில கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் நீங்கள் கூடுதல் பொறுப்புகளை ஏற்க நேரலாம்.

குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். அதனை நீக்கி பரஸ்பரம் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள வேண்டும்.

பயணத்தின்போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கவனமாகப் பாதுகாக்க வேண்டும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அவரின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும்.




இன்று உற்சாகமான நாளாக இருக்கும். உங்களிடம் ஆர்வம், விருப்பம் வெற்றி பெற வேண்டும் என்ற வேட்கை காணப்படும். இன்று உங்கள் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படுகின்றது. புதிய வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள துணையுடன் பக்குவமான புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். குடும்ப வளர்ச்சி குறித்து உங்கள் துணையுடன் கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். இதனை நீங்கள் பயனுள்ள நோக்கங்களுக்கு பயன்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் திடமாகவும் ஸ்திரமாகவும் இருக்கும்.




இன்று அமைதி காணப்படும். இன்றைய நாளின் விளைவுகள் உங்களுக்கு திருப்தியை அளிக்கும். உங்களிடம் மன நிறைவு காணப்படும்.

நீங்கள் தன்னம்பிக்கையுடன் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் பணி செய்யும் முறை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் அன்பாகவும் அனுசரணையாகவும் நடந்து கொள்வீர்கள். பரஸ்பர புரிந்துணர்வும் மகிழ்ச்சியும் காணப்படும்.

பயனுள்ள சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உங்களிடம் காணப்படும் மன மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.





உங்கள் அணுகுமுறையில் யதார்த்தமும் ஒழுங்குமுறையும் தேவை. பயணம் காணப்படுகின்றது. இசை விழாக்களில் பங்கு கொள்வதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது மிகவும் கவனம் தேவை. உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும். அதன் மூலம் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை திறம்பட ஆற்ற முடியும்.

உங்கள துணையுடன் பேசும் போது கவனமாக இருக்க வேண்டும். கவனமற்ற வார்த்தைகள் காரணமாக பாதிப்புகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பேசுவதற்கு முன் விளைவுகளை யோசித்து பேச வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக காணப்படாது. இழப்புகள் ஏற்படாமல் இருக்க பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

# வாரியப்பொல பகுதியில் பஸ்-கார் மோதி விபத்து






**(உடப்பு க.மகாதேவன்)**

ஹெட்டிபொல, குளியாப்பிட்டிய பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் காலை பஸ்ஸும் காரும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

பஸ்ஸின் பின் பக்கத்தில் காரின் சாரதி வாகனத்தை மோதியுள்ளார். இதனால்

இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. காரின் சாரதி வேகமாக செலுத்திய போது இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை வாரியப்பொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.